வேலூர் மாவட்டம் கே.வி.குப்பம் ஊராட்சி ஒன்றியம் நாகல் ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.8.67லட்சம்மதிப்பீட்டில்கட்டப்பட்ட புதிய பகுதி நேர ரேஷன் கடையை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் வே.இரா. சுப்புலட்சுமி நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த்,ஒன்றிய குழு உறுப்பினர் கே.சீதாராமன், ஊராட்சிமன்ற தலைவர்பாலா சேட்டு, முன்னாள் ஒன்றிய கழக செயலாளர் ஜெயக்குமார் கூட்டுறவு பதிவாளர்சுவாதி, மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

கோயம்புத்தூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை சார்பில் ஈச்சனாரி ரத்தினம் கலை அறிவியல் கல்லூரியில் மாபெரும் வேலை வாய்ப்பு முகாமினை 21.09.2024 அன்று அமைச்சர் சி.வி.கணேசன் தொடங்கி வைத்து பணி நியமன ஆணைகளை வழங்கினார். அருகில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அரசு செயலர் கொ.வீரராகவராவ் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் திருமதி. எ.சுந்தரவல்லி, மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி பொள்ளாச்சி நாடளுமன்ற உறுப்பினர் க.ஈஸ்வரசாமி, கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர் திருமதி.கே.ரங்கநாயகி ராமச்சந்திரன், துணை மேயர் இரா.வெற்றிச்செல்வன், மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) திருமதி.ஆ.ஜோதிமணி, இரத்தினம் குழும நிறுவனங்கள் தலைவர் டாக்டர்.மதன். ஏ. செந்தில், கோயம்புத்தூர் தெற்கு மண்டல குழு தலைவர் திருமதி.ர.தனலெட்சுமி, மாவட்ட வேலை வாய்ப்புத் துறை அலுவலர் கருணாகரன், மாநகராட்சி பணிகள் குழு தலைவர் திருமதி.சாந்தி முருகன், ஆகியோர் உள்ளனர்

பேரவைத் தலைவர் மு.அப்பாவு தலைமை!

பாளையங்கோட்டையில் வேலைவாய்ப்பு முகாம்!

மேயர் சோ.இராமகிருஷ்ணன் - மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. - துணை மேயர் கே.ஆர்.ராஜு - விஜிலா சத்யானந்த் பங்கேற்பு!

நெல்லை.செப்.23.

நெல்லை மாவட்டம் பாளையங் கோட்டையில் நெல்லை மாவட்டம் வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டு மையம் தமிழ்நாடு மாநில ஊரகநகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறையின் கீழ் பாளை தூய யோவான் கல்லூரியில் நடைபெற்ற மாபெரும் தனியார் வேலை வாய்ப்பு முகாம் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு தலைமையில் நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் ராபர்ட் புரூஸ், மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன், பாளை சட்டமன்ற உறுப்பினர் மு. அப்துல் வகாப்,துணை மேயர் கே.ஆர்.ராஜு, கிறிஸ்துவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரிய தலைவர் விஜிலா சத்யானந்த் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் ஆண்ட்ரூஸ் வரவேற்புரை யாற்றினார்.

பாளையங்கோட்டை தூய யோவான் கல்லூரியில் 21.09.2024 அன்று காலை 10 மணி முதல் நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமில் 113 நிறுவனங்கள் கலந்து கொண்டனர்.3113 வேலை நாடுனர்கள் நேர்முகத்தேர்வில் பங்கேற்றனர்.இதில் 548 வேலை நாடுநர்களுக்கு பல்வேறு நிறுவனங்கள் மூலம் தேர்வு செய்யப்பட்டு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

கங்கைகொண்டான் சிப்காட்டில் உள்ள டாட்டா சோலார் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தில் பணி புரிவதற்கு வாய் பேசாத மற்றும் காது கேட்காத மாற்றுத் திறனாளிகள் மட்டுமே தேர்ந்தெடுப் பதற்காக நேரடித் தேர்வில் 85 மாற்று திறனாளிகள் கலந்து கொண்டதில் 45 மாற்றுத்திறனாளிகள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கான பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டது. இது ஒரு சிறப்பு ஒரு அம்சமாகும். தேர்வு செய்யப்பட்ட மாற்றுத்திறனாளிகள் முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது நன்றியை தெரிவித்தனர்.

பின்னர் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு வேலை வாய்ப்பு முகாமில் 593 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி பேசியதாவது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க வேண்டும். என்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பிறகு நெல்லை மாவட்டத்தில் 8 தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு 5768 பேருக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. இன்று நடத்தப்படும் 9 வது வேலை வாய்ப்பு முகாமில் 593 பேருக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.முதலமைச்சர் அவர்கள் வெளிநாட்டிற்கு சென்று ரூபாய் 7611 கோடி மூலதனம் கொண்டு வந்து பல்லாயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை உருவாக்குவதற்கான வழிவகை செய்துள்ளார்கள்.தமிழ்நாட்டில் படித்து முடித்த இளைஞர்கள் வேலை வாய்ப்பு பெற வேண்டும்,வரும் இளம் தலைமுறையினர் அனைவரும் படித்து முடித்து பயிற்சி பெற்று வேலை வாய்ப்பு பெற்று ஒரு நல்ல குடும்பத்தை அமைக்க வேண்டும். என்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

கங்கைகொண்டான் சிப்காட்டில் உள்ள டாடா சோலார் பவர் பிளான்ட் நிறுவனத்தில் 3000க்கும் மேற்பட்டவர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.அதில் 80 சதவீதம் பேர் பெண்கள் தான்.இந்த வாய்ப்பினை உருவாக்கித் தந்த முதலமைச்சர் அவர்களுக்கு உங்கள் அனைவரின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.இதில் தனி சிறப்பு என்ற என்றால் டாடா சோலார் பவர் பிளான்ட் நிறுவனத்தில் வாய் பேசாத மற்றும் காது கேளாத மாற்றுத்திறனாளிகளுக்கு பயிற்சி கொடுத்து நேரடி தேர்வின் மூலம் அவர்கள் நிறுவனத்தில் பணி புரிவதற்கான ஆணைகள் இன்று வழங்கப்பட்டுள்ளது.இது ஒரு தனி சிறப்பு அம்சமாக போற்றப்படுகிறது.

முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் நெல்லை மாவட்டத்தில் படித்த வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் நோக்கத்தில் உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி ரத்தினவேல் பாண்டியன் கமிட்டி அளித்த அறிக்கையின் அடிப்படையில் நாங்குநேரியில் சிறப்பு பொருளாதார மண்டல அமைப்பதற்கு 2,519 ஏக்கர் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டது. இதற்கான முயற்சியை மேற்கொண்ட அப்போதைய மறைந்த ஒன்றிய முன்னாள் அமைச்சர் முரசொலி மாறன் அவர்கள் நாங்குநேரியில் சிறப்பு பொருளாதார மண்டலமாக அறிவித்தார்கள்.முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.இதன் மூலம் தென் மாவட்டங்களில் பலலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும் திட்டமிடப்பட்டது. நிலத்தை குத்தகை பெற்ற ஏ.எம்.ஆர்.எல்.நிறுவனம் எந்த பணியும் நாங்குநேரியில் மேற்கொள்ள வில்லை. மாறாக ரூபாய் 855 கோடிக்கு ஒரு நிறு வனத்தில் அடமானம் வைத்து கடன் பெற்றதாக புகார் இருந்தது.இது தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.இதையடுத்து டிட்கோ தனியார் நிறுவனத்துடன் செய்து ஒப்பந்தத்தை கடந்த டிசம்பர் மாதம் ரத்து செய்யப்பட்டது. இந்நிலையில் நாங்குநேரியில் முதற்கட்டமாக 500 ஏக்கர் நிலத்தை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் 24 ஆண்டுகளுக்குப் பிறகு நாங்குநேரியில் சிறப்பு பொருளாதார மண்டலம் திட்டம் மீண்டும் புத்துயிர் பெற உள்ளது.முதல மைச்சர் அவர்களுக்கு உங்கள் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

1971 ஆம் ஆண்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்த போதுதான் முதன் முதலாக 40 இடங்களில் சிப்காட் தொழிற் பேட்டைகள் ஆரம்பிக்கப்பட்டது.இதை தொடர்ந்து சிறு,குறு நடுத்தர தொழில் நிறுவனம் வளர்ச்சிக்காக 128 தொழிற் பேட்டைகளில் 1,30,000 ம் தொழிற் சாலைகள் ரூபாய் 20 ஆயிரம் கோடி முதலீட்டில் பல லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் துவங்கப்பட்டன. பெங்களூரில் மட்டும் தான் ஐ டி பூங்காக்கள் இருந்த நிலையில் 1996 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப் பேற்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் டைடல் பார்க், தொழில்நுட்ப பூங்காக்களை கொண்டு வந்து படித்த இளைஞர்கள் 2 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு பெற்றுத் தந்தார்கள்.

அந்த வழியில் முதலமைச்சர் அவர்கள் நான் முதல்வன் திட்டத்தை கொண்டு வந்து வேலை வாய்ப்பிற்கு செல்ல பயிற்சி அளிக்கும் நிலையை உருவாக்கி தந்துள்ளார்கள். நாடு முழுவதும் வேலைக்குச் செல்லும் பெண்களில் 46 சதவீதம் பேர் தமிழ் நாட்டை சேர்ந்தவர்கள்.

இளைஞர்கள் பயனடைந்து வேலைவாய்ப்பினை பெரும் பல்வேறு திட்டங்களை தொடர்ந்து முதலமைச்சர் அவர்கள் நமக்கு வழங்கி வருகிறார்கள். இன்று நடைபெற்ற வேலை வாய்ப்பு முகாமில் கலந்து கொண்ட அனைவருக்கும் மற்றும் ஆணைகள் பெற்றவர்களுக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு பேசினார். முன்னதாக பாளை சட்டமன்ற உறுப்பினர் மு. அப்துல்வகாப் பேசுகையில்.

முதலமைச்சர் அவர்கள் அமெரிக்காவிற்கு சென்று ரூபாய் 7000 கோடி முதலீடுகளை தமிழ்நாட்டிற்கு கொண்டுவந்துள்ளார்கள். தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை அதிகம் ஈர்த்து படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்காக முதலமைச்சர் அவர்கள் சிந்தித்து திட்டங்களை செயல் படுத்தி வருகிறார்கள். பாளையங்கோட்டை தொகுதியில் படித்தவர்கள் அதிகமாக உள்ளனர். இனி நீங்கள் வெளிநாட்டு, வெளிமாநிலங் களுக்கு வேலைக்கு தேடிச் செல்ல வேண்டாம். தொழில் தொடங்க சிறந்த நம்பர் 1 மாநிலமாக தமிழ் நாடு உள்ளது. அதற்கான அனைத்து கட்டமைப்பு வசதிகளையும் முதல மைச்சர் அவர்கள் உருவாக்கி தருவார்கள்.இதுதான் திராவிட மாடல் ஆட்சியாகும்.

இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்வில் திட்ட இயக்குனர் மகளிர் திட்டம் இலக்குவன், மண்டல இணை இயக்குனர் வேலை வாய்ப்பு (பொ) சண்முக சுந்தர்,மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் சிவசங்கர், ஒன்றிய செயலாளர்கள் ஜோசப்பெல்சி, ராஜன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் பாஸ்கர், கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி துணை தலைவர் இசக்கிபாண்டியன் உள்பட அரசு அலுவலர்கள் வேலை நாடு நர்கள் பலர் கலந்து கொண்டனர்.

கனிமொழி கருணாநிதி எம்.பி. சிறப்புரை! 2026 சட்டமன்றத் தேர்தலிலும் மீண்டும்

கழக ஆட்சி அமைந்திட தீவிரப் பணியாற்றுவோம்!

தி.மு.க. மகளிர் அணி – மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

தஞ்சை, செப். 22-

தி.மு.க மாநில மகளிரணி,மகளிர் தொண்டரணி,பிரச்சாரக்குழு,சமூக வலைத்தளக்குழு,ஆலோசனைக்குழு நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம்

கழகத்துணைப்பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் 20.9.2024 அன்று தஞ்சை ஜெயராம் ஹாலில் நடைபெற்றது.

இதில்மகளிரணித்தலைவர் விஜயா தாயன்பன் ,செயலாளர் ஹெலென் டேவிட்சன்,தொண்டரணிச்செயலாளர் நாமக்கல் ராணி, ,இணைச்செயலாளர்கள் குமரி விஜயகுமார் ,தமிழரசி ரவிக்குமார் மற்றும் மகளிரணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

2026 பொதுத்தேர்தலில் மகளிரணியின் செயல்பாடுகள் எப்படி அமையவேண்டும் என்பது குறித்து ஆலோசனைகளை வழங்கி கனிமொழி எம்.பி. சிறப்புரை ஆற்றினார். இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அமெரிக்க நாட்டிற்கு தமிழ்நாடு அரசின் சார்பில் பயணம் மேற்கொண்டு பல தொழில் அதிபர்களையும் . தொழில் முதலீட்டாளர்களையும் சந்தித்து புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்து பல ஆயிரம் கோடி முதலீட்டை தமிழகத்திற்கு பெற்று திரும்பியிருக்கும் நம் தமிழக முதல்வரின் பயணம் வெற்றிப் பயணம் மட்டுமல்ல தமிழர்கள் அத்தனை பேரையும் பெருமையடையச் செய்யும் நிகழ்வாகவும் அமைந்திருக்கிறது.

அமெரிக்க வாழ் தமிழர்கள் நம் முதல்வருக்கு அளித்த மாபெரும் வரவேற்பு நம்மை நெகிழ்ச்சி செய்கிறது. பல ஆயிரக்கணக்கான தமிழர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திடும் வகையில் இந்த அமெரிக்க வெற்றிப் பயணத்தை மேற்கொண்டு திரும்பியிருக்கும். நம் திராவிட மாடல் அரசின் முதல் வருக்கு மகளிரணி தன் உளமார்ந்த வாழ்த்துக்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது.

கழகத் தலைவராக நாம் முதல்வர் தளபதி அவர்கள் பொறுப்பேற்ற நாள் முதல் நாம் சந்தித்த அத்தனை தேர்தல்களிலும், நம் கழகம் வெற்றி வாகை சூடி வருகிறது. அதற்குக் காரணம் நம் தலைவர் வகுத்த அரசியல் வியூகமும் உழைப்பும்தான் அடுத்து நாம் சந்திக்க விருப்பது 2026 ல் சட்டமன்றத் தேர்தல் எப்படி நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் 40க்கு 40 என சூளுரைத்து வென்றோமோ, அதே போல் எதிர்வரும் பொதுத் தேர்தலிலும் பெரும் பான்மை இடங்களை கைப்பற்றி மீண்டும் கழக ஆட்சி அமைத்திடல் வேண்டும்.

1967 பொதுத்தேர்தலை சந்தித்த பேரறிஞர் அண்ணா அவர்களும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், 1964 லிலேயே திட்டமிடத் தொடங்கி, வெற்றிக் கூட்டணியை அமைத்து 1967 ல் மாபெரும் வெற்றியைப் பெற்றார்கள். அவர்கள் அடியொற்றி நடைபோடும் நம் தளபதி அவர்கள், 2026 பொதுத் தேர்தல்காக 2024 லிலேயே தேர்தல் பணிகளை தொடங்கியிருக்கிறார். கழக முன்னோடிகளைக் கொண்டு ஒரு குழு அமைத்து, அதன் மூலம் மாவட்ட நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள் அத்தனை பேரின் கருத்துகளையும் ஆய்வு செய்து அதன் அடிப்படையில் 2026 சட்டமன்ற தேர்தல் கான திட்டமிடுதலை தொடங்கியிருக்கிறார். அவர் அனைத்திலும் வெற்றி பெற மகளிரணியின் சார்பில் வாழ்த்துக்கள்

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மகத்தான வெற்றியை நாம் பெற்றிருக்கிறோம். குறிப்பாக தூத்துக்குடி தொகுதியில் போட்டியிட்டு வென்ற நம் கழகத்தின் துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி அவர்கள் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அத்தனை வேட்பாளர்களையும் டெபாசிட் இழக்கச் செய்தார் என்பது வரலாறு காணாத ஓர் நிகழ்வு.

தன்னுடைய ஓய்வரியா உழைப்பின் மூலம் தூத்துக்குடி மக்களின் மனதில் நிலையான இடம் பெற்றிருக்கும் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்களுக்கு மகளிரணி தன் உளமார்ந்த பாராட்டுகளை தெரிவித்துக்கொள்கிறது.

திமுக கழகத்தின் முப்பெரும் விழா. கழகத்தின் பவள விழா சமீபத்தில் நம் முதல்வர் கழகத் தலைவர் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது தமிழகத்தில் எந்தக் கட்சிக்கும் இல்லாத தனிச்சிறப்பு இது 1949 ஆம் ஆண்டு சென்னை ராபின்சன் பூங்காவில் தொடங்கப்பட்ட நம் இயக்கம் 75 ஆண்டுகளைக் கடந்து வெற்றி நடை போடுகிறது அன்று முதல் இன்று வரை கழகத்தின் வளர்ச்சியில் மகளிர் பங்கு மிக முக்கியமானது எதிர்வரும் பொதுத்தேர்தல் 2026 இல் நடைபெற உள்ளது 2021 இல் முதல்வராக பொறுப்பேற்ற நம் முதல்வரின் சாதனைகள் வரலாற்றுச் சிறப்புமிக்கது அதை மக்களிடம் குறிப்பாக நம் தாய்மார்களிடம் கொண்டு சேர்க்கும் பொறுப்பு மகளிர் அணிக்கு உள்ளது அதை மனதில் கொண்டு நம் பணிகளை உடனே தொடங்கிடல் வேண்டும் 2026 இல் மாபெரும் வெற்றி பெற்று மீண்டும் நம் தளபதியை தமிழக முதல்வர் ஆக்கிட, நம் மகளிரணி தீவிரமாக தேர்தல் களப்பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு உழைத்திடுவோம் என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அரியலூர் மாவட்ட

மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி கலந்தாய்வுக் கூட்டம்!

அமைச்சர் சா.சி.சிவசங்கர் பங்கேற்பு!

அரியலூர், செப், 22

அரியலூர் மாவட்ட மகளிர் அணி , மகளிர் தொண்டர் அணி கலந்தாய்வு கூட்டம் மாவட்ட அலுவல கத்தில் மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில் நடைபெற்றது.

நடைபெற்ற கலந்தாய்வு கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு அரசு போக்குவரத்து துறை அமைச்ச சா.சி.சிவசங்கர், மாநில பிரச்சார குழு செயலாளர் சேலம் சுஜாதா ஆகியோர் கலந்துகொண்டு அரியலூர் மாவட்டத்தில் உள்ள ஒன்றியம், நகரங்களில் புதிய மகளிர் அணி உருப்பினர்களை சேர்க்கவேண்டும், அதேபோல இளம்பெண்கள் பயிற்சி பாசறை அமைப்பது குறித்தும் மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து விவாதிக்கப்பட்டது. உறுப்பினர் சேர்க்கை மேலும் அதிகப்படுத்துவது குறித்து மகளிர் அணி பொறுப்பாளர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர் சி.சந்திரசேகர், ஒன்றிய கழக செயலாளர்கள், தனசேகர், இரா.கென்னடி, பூ.செல்வராஜ், இரா.மணிமாறன், மா.அன்பழகன், கோ. அறிவழகன், ரெ.அசோக் சக்கரவர்த்தி, ஆர்.கலியபெருமாள், வி.எழில்மாறன், நகர கழக செயலாளர் இரா. முருகேசன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், பேரூர் கழக செயலாளர்கள் ப.கோபால கிருஷ்ணன், அல்போன்ஸ், மாவட்ட மகளிர் அணி அமைப்பா ளர்கள் பானுமதி ராஜேந்திரன், மீனா சாமிநாதன், மாவட்ட மகளிர் அணி தலைவர் விஜயலட்சுமி, மற்றும் மகளிர் அணி நிர்வாகிகள் ராணி சந்திரசேகர், காந்திமதி, பர்வதவர்தினி,இராணி,மலர் விழி ரஞ்ஜித்குமார், எழிலரசி, சித்ரா, மல்லிகை சுந்தரம், பேனிதா, இலக்கியா, மற்றும் மகளிர் அணி,மகளிர் தொண்டணி நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.

நெல்லை பேட்டை பகுதி மலையாள மேட்டில் வைத்து நடைபெற்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் 101 வது பிறந்தநாள் விழா சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி இமானுவேல் சேகரன் அவர்கள் பிறந்த நாள் விழாவை அரசு விழாவாக அறிவித்த முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கு பாராட்டு விழா, மின்னொளி கபாடி போட்டி விழா, ஆகிய முப்பெரும் விழா நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் உரையாற்றினார். உடன் பகுதி செயலாளர் சுப்பிரமணியன்,மாநகர துணை செயலாளர் அப்துல் கையூம் உள்பட பலர் உள்ளனர்.

இராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு மேற்கு ஒன்றியம் அரப்பாக்கம் அன்னை மீரா தொழில்நுட்ப கல்லூரியில் மாபெரும் கல்விக் கடன் முகாம் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி, மாணவ – மாணவிகளுக்கு உதவி தொகை வழங்கினார். நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் ஜெ.யு.சந்திரகலா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி, ஆற்காடு ஒன்றிய குழு தலைவர் புவனேஸ்வரி சந்தியானந்தம் ,ஆற்காடு ஒன்றிய குழு துணை தலைவர் ஸ்ரீமதி நந்தகுமார், கல்லூரி தலைவர் எஸ்.இராமதாஸ் கல்லூரி செயலாளர் ஜி.தாமோதரன் நகர மன்ற துணை தலைவர் குல் சார் அகமத் மேலகுப்பம் ஊராட்சி மன்ற தலைவர் பாஸ்கர் முன்னோடிவங்கி மேலாளர் ராம்ஜி குமார் பொதுமேலாளர் மாவட்ட தொழில் மையம் ஆனந்தன், மாவட்ட மேலாளர் அமுதா ஒன்றிய செயலாளர் ஏ.வி.நந்தகுமார் அவைத்தலைவர் தண்டபாணி, ஒன்றிய கவுன்சிலர் கோபாலகிருஷ்ணன் , துணை தலைவர் நந்தினி வினோத்குமார், மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் தீலிப் அவைத்தலைவர் இமாயூன் மாவட்ட பிரதிநிதி இம்தியாஸ் நகர மன்ற உறுப்பினர்கள் ஜாபர் காதர் ஆலிம் மற்றும் மாணவ மாணவிகள் அனைத்து வங்கி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.